
மே – 25

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர், பரங்கிமலை/செயிண்ட் தாமஸ் மௌண்ட், ஓசூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மூன்று புதிதான 'தோழி' பணி புரியும் மகளிருக்கான விடுதிகளைத் திறந்து வைத்தார்.
- பஹார் தத் மற்றும் விஜய் பேடி ஆகியோர் இயக்கிய 'Saving the Bhimanama: Ayushi Jain and a Giant Turtle' என்ற ஆவணப்படமானது சமீபத்தில் 15வது தாதாசாகேப் பால்கே திரைப் பட விருது விழாவில் (2025) சிறந்த ஆவணப்படத்திற்கான விருதைப் பெற்றது.
- 78வது உலக சுகாதார சபையானது, சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் 'One World for Health' என்ற கருத்துருவின் கீழ் நடத்தப் படுகிறது.
- உலகளவில் அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டினை வளர்ப்பதில் கலாச்சாரச் செழுமை மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான தொடர்பின் / பேச்சுவார்த்தை மூலம் முக்கியப் பங்கைக் கொண்டாடுவதற்காக ஆண்டுதோறும் மே 21 ஆம் தேதி அன்று உலகப் பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத் தன்மை தினம் அனுசரிக்க ப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஒருங்கிணைந்தப் பறவைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2025 – தமிழ்நாடு




- 798 என்ற அளவிலான பல தரப்பட்ட இனங்களில் 7.8 லட்சம் ஈரநில வாழவாழ் மற்றும் நிலப்பரப்பு வாழ் பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- முதற்கட்டக் கணக்கெடுப்பில் 397 பறவை இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன், மொத்தம் 5,52,349 பறவைகள் உள்ள நிலையில் இதில் 136 இனங்களைச் சேர்ந்த 1,13,606 வலசை போகும் பறவைகள் அடங்கும்.
- இரண்டாம் கட்டக் கணக்கெடுப்பில் சுமார் 401 நிலப் பரப்பு வாழ் பறவை இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் இதில் மொத்தம் 2,32,519 பறவைகள் உள்ள நிலையில் அவற்றில் 1,13,606 வலசை போகும் பறவை இனங்கள் ஆகும்.
- இரண்டு கட்டக் கணக்கெடுப்புகளிலும் 26 அருகி வரும் மற்றும் 17 இரவு நேர வாழ்

பறவை இனங்களும் ஆவணப்படுத்தப்பட்டன.

- தமிழ்நாட்டில் உள்ள 37 அருகி வரும் பறவை இனங்களில் 26 இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## துணைவேந்தர்கள் நியமனம்

- துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பாக சமீபத்தில் இயற்றப் பட்டச் சட்டங்களுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.
- ஆளுநரின் அதிகாரங்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் அத்தீர்ப்பிற்குப் பிறகு இந்தச் சட்டங்கள் தானாகவே நிறைவேற்றப் பட்டன.
- அவை அரசு நடத்தும் பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் ஒரு அதிகாரத்தினை ஆளுநரிடமிருந்து கைப்பற்றி முதல்வருக்கு வழங்கின.
- மனுதாரர் திருத்தப்பட்டச் சட்டங்கள் UGC விதிமுறைகளுடன் முரண்படுவதாகவும், வெளிப்படைத் தன்மை இல்லாததாக உள்ளதாகவும் வாதிட்டார்.




## அடையாளம் தெரியாத நபரின் அடையாளம் காண்பதற்கான ஆதார் தரவு




- இறந்தவரின் கைரேகைகளை ஆதார் தரவுத் தளத்துடன் ஒப்பிட்டு, ஒரு அடையாளம் தெரியாத நபரின் அடையாளத்தைக் கண்டறியும் நோக்கத்திற்காக காவல்துறைக்கு மக்கள்தொகை சார்ந்தத் தகவல்களின் அணுகலை வழங்குவதற்கான சாத்தியக் கூறு இல்லை என்று இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) கூறியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டு ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், சலுகைகள் மற்றும் இதர சேவைகளை இலக்காகக் கொண்டது) சட்டம் ஆனது இத்தகவல்களைப் பகிர்வதில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

- பயனாளிகளுக்கு அரசாங்க மானியங்கள், சலுகைகள் மற்றும் சேவைகளை இலக்கு நிர்ணயம் அடிப்படையில் வழங்குவதை உறுதி செய்வதே ஆதார் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- ஆதார் சட்டத்தின் VI ஆம் அத்தியாயம் ஆனது, தனிப்பட்டப் பதிவுகள் தொடர்பாக கடுமையான இரகசியத்தன்மையைப் பேணுமாறு வேண்டி UIDAI ஆணையத்தினைக் கோருகிறது.
- இச்சட்டத்தின் 29(1) பிரிவு ஆனது, சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட அல்லது உருவாக்கப் பட்ட எந்தவொரு முக்கிய உயிரியளவியல் தகவலும் எந்த ஒரு காரணத்திற்காகவும் யாருடனும் பகிரப்படக்கூடாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.
- இதன் 33(1) பிரிவு ஆனது, சம்பந்தப்பட்ட நபர் மற்றும் UIDAI ஆணையம் ஆகியவற்றின் பரிசீலனையினைப் பெற்ற பிறகு, உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் மட்டும் அத்தகைய வெளிப்படுத்தலுக்கான ஒரு குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தால், அதன் பின் மட்டுமே அடையாளத் தகவல் அல்லது அங்கீகாரப் பதிவுகளை (ஆனால் முக்கிய உயிரியளவியல் தகவல் அல்ல) வெளியிட முடியும் என்று கூறுகிறது.

# தேசியச் செய்திகள்

## பொது விநியோகத் திட்டத்தில் புதிய முன்னெடுப்புகள்




- மத்திய அரசானது, டிப்போட் தர்பன் வலை தளம், அன்ன மித்ரா மற்றும் அன்ன சஹாயதா போன்ற எண்ணிம தளங்கள் ஆகிய மூன்று முக்கியமான எண்ணிம முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்புகளானது, இந்தியாவின் பொது விநியோக முறையை (PDS) மாற்றி அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- டிப்போட் தர்பன் என்பது ஒரு எண்ணிம சுய மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு தளம் ஆகும்.
- இது உணவுச் சேமிப்புக் கிடங்கு அதிகாரிகள் தங்கள் செயல்பாடுகளை முறையாக மதிப்பீடு செய்து மேம்படுத்துவதற்கான அதிகாரம் அளிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொது விநியோக அமைப்பில் முக்கியப் பங்குதாரர்களின் குறிப்பிட்ட செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அன்ன மித்ரா வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அன்ன சஹாயதா என்பது குடிமக்களுக்கு முன்னுரிமையளிக்கும் ஒரு குறை தீர்க்கும் தளமாகும்.
- இது பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) திட்டத்தின் 81 கோடிக்கும் மேற்பட்டப் பயனாளிகளுக்கு சேவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்

பட்டுள்ளது.

- ❖ தற்போதையச் செயல்பாட்டில் அன்ன மித்ரா அசாம், உத்தரக்காண்ட், திரிபுரா மற்றும் பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- ❖ தற்போது ஒரு சோதனைக் கட்டத்தில் உள்ள அன்ன சஹாயதா குஜராத், ஜார்க்கண்ட், தெலுங்கானா, திரிபுரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் செயல் படுத்தப் படுகிறது.

## பிரதான் மந்திரி திவ்யஷா கேந்திரா (PMDK)




- ❖ மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ராஜஸ்தானின் கோட்டா என்னுமிடத்தில் பிரதான் மந்திரி திவ்யஷா கேந்திரா (PMDK) மையத்தினைத் திறந்து வைத்தார்.
- ❖ இது முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தரமான, மலிவு விலையிலான உதவி சாதனங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ தற்போது, பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் சுமார் 45 PMDK மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- ❖ இந்த முன்னெடுப்பினை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தின் இந்தியச் செயற்கை மூட்டுகள் உற்பத்தி கழகம் (ALIMCO) என்ற பிரிவு முன்னெடுத்து நடத்துகிறது.

## சாகர் மேன் சம்மான்


- ❖ கடல்சார் துறையில் உள்ள பெண்களுக்கான சர்வதேசத் தினத்தன்று சாகர் மேன் சம்மான் கொள்கை முன்னெடுப்பினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ கடல்சார் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த முக்கியக் கொள்கையானது, கடல்சார் தொழில்துறையில் அதிகாரமளித்தல், பெரும் தலைமைத்துவம், உள்ளடக்கம், பாதுகாப்பு, திறன் மேம்பாடு மற்றும் பாலினம் அடிப்படையிலான தடைகளை அகற்றுதல் ஆகியவற்றைக் கையாளும்.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் தொழில்நுட்ப வகை கடல்சார் பாத்திரங்களில் பெண்களுக்கு

12 சதவீத பிரதிநிதித்துவத்தை இந்தியா இலட்சிய இலக்காகக் கொண்டுள்ளது.

- இந்தியாவின் கடல்சார் துறையில் 2014 ஆம் ஆண்டில் வெறும் 341 ஆக இருந்த பெண் பணியாளர்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 2,557 ஆக அதிகரித்து உள்ளது.




## சன்சத் ரத்னா விருதுகள் 2025





- 2025 ஆம் ஆண்டு சன்சத் ரத்னா விருதிற்குப் பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இரண்டு பாராளுமன்ற நிலைக்குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- பிரைம் பாயிண்ட் என்ற ஒரு அறக்கட்டளையால் நிறுவப்பட்ட இந்த விருதுகளானது, பாராளுமன்றத்திற்கு அவர்கள் ஆற்றிய முக்கியப் பங்களிப்பிற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் (NCBC) தலைவர் ஹன்ஸ்ராஜ் அஹிர் தலைமையிலான தீர்ப்பாயக் குழுவினால் விருது பெறுபவர்களின் பெயர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளன.
- திரு. மஹ்தாப், சுப்ரியா சுலே (NCP-SP), N K பிரேமச்சந்திரன் (RSP) மற்றும் ஸ்ரீரங் அப்பா

பார்னே ஆகியோர் 'பாராளுமன்ற ஜனநாயகத்திற்கான சிறந்த மற்றும் நிலையான பங்களிப்பு'க்கான விருதுகளைப் பெற உள்ளனர்.

- தமிழ்நாட்டைச் சேர்ந்த C.N. அண்ணாதுரை (திமுக) இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 11 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, தமிழ்நாட்டைச் சேர்ந்த உறுப்பினர் இந்த விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்த நூற்றாண்டின் வறட்சியான வசந்த காலம் - ஐக்கியப் பேரரசு




- பிரிட்டன் வானிலை ஆய்வு அலுவலகமானது, தற்போதைய வசந்த காலத்தினை ஒரு நூற்றாண்டின் 'வறட்சியான' பருவம் என்று அறிவித்துள்ளது.
- இந்த வசந்த காலத்தில், வழக்கமாகப் பெய்யும் 229 மில்லி மீட்டர் மழைப்பொழிவுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டில் 80 மில்லி மீட்டர் மட்டுமே மழைப்பொழிவு பதிவாகி உள்ளது.
- இது 100 ஆண்டுகளுக்கும் மேலான வறட்சியான வசந்த காலத்தினைக் குறிக்கிறது.
- ஐக்கியப் பேரரசு ஆனது கடைசியாக 2022 ஆம் ஆண்டு கோடை காலத்தில் அதிகாரப் பூர்வ வறட்சி காலத்தினை எதிர்கொண்டது.
- 2022 ஆம் ஆண்டு வசந்த காலத்தின் எதிர்பார்க்கப்பட்ட மழைப்பொழிவில் சுமார் 78 சதவீத மழைப்பொழிவு பதிவானது என்ற ஒரு நிலையில் இந்த ஆண்டு இது வரையில் வெறும் 35 சதவீதம் மழைப்பொழிவு மட்டுமே பதிவாகியுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## அமெரிக்க கச்சா எண்ணெய் விநியோகம்

- அமெரிக்கா ஐக்கிய அரபு அமீரகத்தினை முந்தி, இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் வழங்கும் உலகின் நான்காவது பெரிய நாடாக மாறியுள்ளது.
- ஏப்ரல் மாதத்தில் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் அமெரிக்கா சுமார்

7.3% பங்கைக் கொண்டுள்ளது என்பதோடு இது ஐக்கிய அரபு அமீரகத்தின் சுமார் 6.4 சதவீதத்தினை விட அதிகமாகும்.

- இருப்பினும், அது சவுதி அரேபியா (10.4%), ஈராக் (19.1%) மற்றும் ரஷ்யா (37.8%) ஆகிய நாடுகளை விட பின் தங்கியே இருந்தது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் வலுவான பண மதிப்புகள்- 2025

| Rank | Currency | Symbol | Value in INR | Value in USD |
|---|---|---|---|---|
| 1. | Kuwaiti Dinar | KWD | 278.41 | 3.26 |
| 2. | Bahraini Dinar | BHD | 226.43 | 2.65 |
| 3. | Omani Rial | OMR | 221.65 | 2.60 |
| 4. | Jordanian Dinar | JOD | 120.33 | 1.41 |
| 5. | Gibraltar Pound | GIP) | 113.53 | 1.33 |
| 6. | British Pound | GBP | 113.53 | 1.33 |
| 7. | Cayman Islands Dollar | KYD | 102.49 | 1.20 |
| 8. | Swiss Franc | CHF | 103.34 | 1.21 |
| 9. | Euro | EUR | 97.01 | 1.14 |
| 10. | United States Dollar | USD | 85.34 | 1.00 |

- குவைத் தினார் (KWD) ஆனது உலகளவில் மிகவும் வலுவான/மதிப்புமிக்க நாணயமாக உள்ளது.
- பஹ்ரைன் தினார் (BHD) ஆனது, உலகின் இரண்டாவது மிக மதிப்புமிக்க நாணயமாக உள்ளது.
- ஓமானி ரியால் உலகளவில் மூன்றாவது மிக அதிக மதிப்புள்ள நாணயமாக இடம் பிடித்துள்ளது.
- ரியால் மதிப்பினை ஏற்பதற்கு முன்பு, ஓமன் அதன் பணத் தேவைகளுக்கு இந்திய ரூபாயையே பயன்படுத்தியது.
- ஜோர்டானிய தினார் (JOD) ஆனது உலகின் நான்காவது மிகவும் அதிக மதிப்புள்ள நாணயம் ஆகும்.

- அவற்றைத் தொடர்ந்து ஜிப்ரால்டர் பவுண்ட், பிரிட்டிஷ் பவுண்ட், கேமன் தீவுகள் டாலர், சுவிஸ் பிராங்க், யூரோ மற்றும் அமெரிக்க டாலர் ஆகியவை உள்ளன.


# முக்கிய தினங்கள்

## உலக அளவியல் தினம் 2025 - மே 20

- இந்தத் தினமானது, பாரீஸ் நகரில் 1875 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதியன்று கையெழுத்திடப் பட்ட மீட்டர் உடன்படிக்கையினை நினைவு கூருகிறது.
- 2025 ஆம் ஆண்டானது இந்த மீட்டர் உடன்படிக்கையின் 150வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- உலகளவில் ஆராய்ச்சி அளவீடுகள் மற்றும் அலகுத் தரப்படுத்தலில் நிலைத்தன்மை மற்றும் நியாயத்தை உறுதி செய்வதற்காக மெட்ரிக் முறையை அதிகாரப்பூர்வமாக நிறுவிய ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Measurements for all times, for all people' என்பதாகும்.




## சர்வதேச தேயிலை/டீ தினம் 2025 - மே 21




- கேமல்லியா சினென்சிஸ் என்ற ஒரு தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் தேநீர் ஆனது, தண்ணீருக்கு அடுத்தபடியாக உலகின் மிகவும் பிரபலமான பானமாகும்.
- தேநீர் ஆனது கி.மு. 2737 ஆம் ஆண்டில் சீனாவில் தோன்றியதாக நம்பப் படுகிறது.

- இந்தியாவில் 1824 ஆம் ஆண்டில் தேயிலைச் சாகுபடியை ஆங்கிலேயர்கள் வணிக ரீதியாக அறிமுகப்படுத்தினர்.
- அப்போதிலிருந்து, டார்ஜிலிங், நீலகிரி மற்றும் அசாம் போன்ற பகுதிகள் தேயிலைக்கு பெயர் பெற்றுள்ளதுடன், இந்தியா ஒரு பெரிய தேநீர் உற்பத்தியாளராக உருவெடுத்து உள்ளது.
- இன்று, இந்தியா ஆண்டுதோறும் சுமார் 900,000 டன் தேயிலையை உற்பத்தி செய்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Tea for Better Lives' என்பதாகும்.

## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் 2025 - மே 22

- இது புவியின் நம்ப முடியாத பல்வேறு வகையான உயிர்களைப் பாதுகாப்பதில் தங்கள் பங்கை வகிக்குமாறு அனைத்து மக்களுக்கும் ஒரு உலகளாவிய அழைப்பாகச் செயல் படுகிறது.
- முதலில், உயிரியல் பன்முகத்தன்மைக்கான உடன்படிக்கையானது நடைமுறைக்கு வந்த நாளைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 29 ஆம் தேதியன்று இந்தத் தினமானது கொண்டாடப் பட்டது.
- இருப்பினும், 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று, 1992 ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோ புவி உச்சி மாநாட்டில் உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூரும் வகையில் இத்தினத்திற்கான தேதியானது மே 22 ஆக மாற்றப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Harmony with Nature and Sustainable Development" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★